DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.55/2022**

Deposition of witness for Prosecution அ.சா.6

Name : டாக்டர்.மனோசிந்தியா
Father/ Husband Name : கார்த்திக்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர் .

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 02.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் கடந்த 14.08.2020-ல் இரவு 10.30 மணியளவில் தேவகோட்டை அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபொழுது ராகிணி என்பவர் தன்னை 14.08.2020-ம் தேதி இரவு 10.00 மணிக்கு அடையாளம் தெரிந்த 2 ஆண் நபர்கள் அவருடைய வீட்டில் வைத்து பாட்டில் மற்றும் பேட்டால் தாக்கியதாக கூறினார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவரை பரிசோதனை செய்ததில் நெற்றியில் 2X1 அளவுள்ள வெட்டுக்காயம் இருந்தது. அவருக்கு சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று விபத்துபதிவேட்டுடன் சேர்ந்து காயச்சான்றிதழ் வழங்கினேன். **(காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. பொதுவாக சட்ட மருத்துவ வழக்குகளில் விபத்து பதிவேடு பதிவு செய்ய தனியாக அதற்கென்று விபத்து பதிவேடு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பதிவேடு வரிசை எண் கொடுக்கப்பட்ட ஒரு புத்தகமாக இருக்குமென்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேட்டில் அசலை காவல்துறையினருக்கு கொடுத்துவிட்டு கார்பன் நகலை மருத்துவமனையில் வைத்திருப்போம் என்றால் சரிதான்.

2. அவ்வாறான விபத்து பதிவேட்டில் இந்த வழக்கில் விபத்து பதிவேடு வழங்கவில்லை என்றால் சரிதான், எல்லா நேரமும் எங்களுக்கு சப்ளை இருக்காது. எல்லாநேரங்களிலும் விபத்து பதிவேடு இருக்குமெனவும் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்காக பின்னிட்டு மேற்படி விபத்து பதிவேட்டை பொய்யாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

3. காயம்பட்ட நபர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கொண்டுவரப்பட்டார் என்றால் சரிதான். அ.சா.ஆ2ல் தேதியான 14.08.2020 -ல் 8 என்பது திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட நபரை சம்பத்தன்று பார்த்து தான் இன்று ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சிராய்ப்புக் காயத்தை தான் laceration என்று குறிப்பிடுவார்கள் என்றால் சரியல்ல. சிராய்ப்புக் காயத்தை Abrasion என்று குறிப்பிடுவார்கள். laceration என்பது வெட்டுக்காயம். நான் சொல்லும் காயம் தடுமாறி நிலையில் விழுந்தாலோ, சமையலறையில் தவறி விழுந்தாலோ ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.